# <u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>

## <u>OS.No. 108 / 2024</u>

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாள் புதன் கிழமை **வா.சா.–3** வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.சாந்தி, கிரேடு–1 பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சுரேஷ் | **வட்டம்** | |
| **த/பெ** | ராமலிங்கம் | **தொழில்** | |
| **கிராமம்** | | **வயது** | 59 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 3 வது சாட்சியாவேன். இந்த சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையவைதான். என் முன்பாக காட்டப்படும் Ex.A1 இல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். Ex.A1 இல் உள்ள வாசகங்களை நான்தான் எழுதினேன். மனுபடி உத்தரவு வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் Diploma Mechanic படித்துள்ளேன். வாதி சிவக்குமார் எனக்கு தெரிந்தவர். நான் என்ன கடை வைத்துள்ளேன் என்றால் பவுன் அடகு கடை மற்றும் Finance வைத்துள்ளேன். எனக்கு பத்திரம் எழுதுவதும், பாண்டு எழுதுவதும் தொழில் கிடையாது என்றால் சரிதான், ஆனால் பத்திரம், பாண்டு எழுத தெரியும். கடனுறுதி சீட்டில் உள்ள விவரங்களை நான்தான் எழுதினேன் என்றும், நான் அதில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என் முன்பாக காட்டப்படும் Ex.A1 கடனுறுதி சீட்டை பார்த்துதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது

இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரிதான். நான் கடனுறுதி சீட்டு எழுதியதாக சொல்லப்படும்போது எவ்வளவு பண பரிவர்த்தனை நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ரூ.12,00,000/- பணம் கொடுத்தார். அவ்வாறு எந்த பணமும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்தான் என்னுடையது என்றால் சரிதான். நான் எழுதிய கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பமிட்டுள்ள நபர்களை எனக்கு தெரியுமா என்றால் ஒருவரை மட்டும் தெரியும், மற்றொருவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கின் பிரதிவாதி பிரபு என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆசிரியராக இருப்பதாக அறிமுகம் செய்து வைத்தார். மேற்படி பிரதிவாதி பிரபு ஆசிரியராக பணி செய்து வருவதாக எனக்கு அறிமுகம் செய்த வைத்ததாக நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னை கடனுறுதி சீட்டு எழுதுவதற்காகத்தான் கூப்பிட்டார்கள் என்றாலும், ஆனாலும் பணம் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல, பணம் கொடுத்தார். என் முன்னிலையில் எந்த காலத்திலும் கடனுறுதி சீட்டில் சொல்லப்பட்டுள்ள தொகையினை வாதி பிரதிவாதியிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடனுறுதி சீட்டில் உள்ள விபரங்களை நான் எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எழுதியிருந்தால் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துள்ளவாறு கடனுறுதி சீட்டிலும் நான்தான் எழுதினேன் என்று கையொப்பம் செய்திருப்பேன் என்றால் நான்தான் எழுதினேன் என்று கடனுறுதி சீட்டில் எழுதியுள்ளேன். என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண

**வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தவறானது என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை :–</u>**

**இல்லை.**

ஒப்பம்.திருமதி.மணிமேகலை,**L.L.M.,**
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
அரியலூர்.